கேள்விகளை அனுமதிக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படுகிறது. எனவே, துணைக் கேள்விகளை அனுமதிப்பதும், அனுமதிக்காததும் அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப பேரவைத் தலைவர் தீர்மானிக்க வேண்டும். மிக முக்கியமான கேள்வி என்றால், அதில் துணைக் கேள்வி என்றால், எதிர்க்கட்சித் தலைவரே எழுந்திருந்து கேட்டு, அந்தக் கேள்வியைப் பதிவு செய்யலாம்.

(ஆ) ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள நளினி செல்ஃ.போனில் பலருடன் தொடர்புகொண்டது—நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் இதே அவையில், எங்களுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய படுகொலை வழக்கில் முக்கியக் குற்றவாளியான நளினி அவர்கள், அவருடைய கைகளிலே செல்ஃபோனை வைத்துக்கொண்டு சிறையிலே கடந்த நான்காண்டுகளாக வெளிநாடுகளில் இருப்பவர்களுடன் பேசினார்கள் என்ற ஒரு கருத்தை இந்த இடத்திலே எழுப்பினேன். அதற்கு அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். "விசாரணையில்தான் அவர்கள் நான்காண்டுகளாகப் பேசினார்களா, இல்லையா என்பது தெரிய வரும்" என்று சொன்னார்கள். அவர் செய்தது, cognizable offence. A case has been registered under section 353, preventing the Government Servants from discharging their duties, அப்புறம் 186 and 201—disappearance of the evidence என்று வழக்குகள் பதிவு செய்து, 42–வது விதி, Prison Manual பிரகாரம், அதிலேயும் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். So far she has not been arrested. That is what we learnt. எனவே நான் அரசிடம் கேட்பதெல்லாம், இப்படிக் குற்றம் செய்த அவர் இதுவரை கைது செய்யப்பட்டாரா? இல்லையா? அவருக்கு இன்னும் முதல் வகுப்பு அளிக்கப்பட்டு வருகிறதா? அவர் தனிச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறாரா அல்லது அங்கேயிருக்கக்கூடிய சிறைத் துறை அலுவலர்கள் அவருக்கு உதவிபுரிந்த காரணத்தினாலே, அந்தச் சிறையிலேயே வைத்திருப்பது சரியா அல்லது வேறு சிறைக்கு அவரை மாற்றப் போகிறீர்களா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 23]

(இ) காஞ்சிபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனை, ஜெனரேட்டர் வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.*

திரு. கோ. அரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருக்கிறது. தமிழகம் மட்டுமன்றி, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்தும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற காஞ்சிபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு ரேடியோ கதிர்வீச்சு அவசியம் தேவைப்படுகிறது. அந்தச் சூழ்நிலையில் அந்த அரசு மருத்துவமனையில் ஜெனரேட்டர்கூட இல்லாமல் மூன்று மணி நேரம், நான்கு மணி நேரம் மின் தட்டுப்பாடு ஏற்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அந்த நோயாளிகள் பயன்பெறுகின்ற வகையில் ஜெனரேட்டர் வசதி செய்து தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10—15

(ஈ) கோவை, மெர்கன்டைல் நிதி நிறுவனம் நடத்தி மோசடி—ஏமாந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரில்,* Mercantile *என்ற ஒரு நிதி நிறுவனத்தின் பெயரில், திருமதி சசிரேகா என்பவர் ரூ.150 கோடிக்கு மேல் மோசடி செய்துள்ளார் என்ற செய்தி வந்திருக்கிறது. இந்த மோசடி நிதி நிறுவனத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் முதலீடு செய்து ஏமாந்து, பணத்தையும் இழந்து, மன உளைச்சலுக்கும் ஆளாகக்கூடிய சூழ்நிலை வந்திருக்கிறது. இதுபோல, பல மோசடி நிறுவனங்கள் நாட்டிலே முளைத்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கும், இந்த மோசடி நிறுவனத்திடம் ஏமாந்தவர்களுக்கு உரிய வகையில் இழப்பீட்டுத்*

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

தொகை கிடைப்பதற்கும் அரசு ஆவன செய்து, அதற்கு நட்வடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான், முடிந்துவிட்டது. அடுத்து, வேறு சப்ஜெக்ட் எடுக்கிறேன். கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்கு. . . (குறுக்கீடு)

(ஆ) ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள நளினி செல்ஃபோனில் பலருடன் தொடர்பு கொண்டது— நடவடிக்கை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், வேலூர் பெண்கள் சிறையிலிருக்கும் திருமதி நளினியினுடைய அறையிலிருந்து செல்ஃபோன் எடுத்ததைக் குறிப்பிட்டு, அதற்கு மேற்கொண்டு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

இது குறித்து நான் ஏற்கெனவே இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். 20–4–2010 அன்று காலையில் சுமார் 6–00 மணியளவில் routine check–up என்ற முறையில் Jail Superintendent அவர்களும், மற்ற அதிகாரிகளும் அறைதோறும் சோதனையிட்டு வந்தபொழுது, நளினியினுடைய அறைக்குச் சென்று சோதனையிட முயன்றிருக்கிறார்கள். அவர்கள் சோதனையிடுகிறபொழுது, திருமதி நளினி ஒரு துணிப் பையை எடுத்து தொலைவிலே வீசியிருக்கிறார் என்றும், அதைக் கைப்பற்றிப் பார்த்தபொழுது, அதிலே ஒரு செல்ஃபோன் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், திருமதி நளினி அவர்கள் அதைப் பிடுங்கி ஒரு bucket–லே போட்டு, அதை toilet–க்குள் ஊற்றிவிட்டதாகவும், Deputy Jailor அவர்கள் பாய்ந்து சென்று toilet–க்குள் கையைவிட்டு அதை எடுத்து ‘Q’ Branch–க்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றும் நான் அன்றைக்குத் தெரிவித்தேன்.

2010 ஏப்ரல் 23] [திரு. துரைமுருகன்]

அதே நேரத்தில், ஒரு செல்ஃபோன் உள்ளே இருந்ததற்கும், அரசு அதிகாரிகள் தங்களுடைய பணிகளைச் செய்கிறபோது, அதைச் செய்யவிடாமல் திருமதி நளினி தடுத்ததற்கும், அந்தப் பெண்கள் சிறையினுடைய Superintendent அவர்கள் பாகாயம் Police Station–லே வழக்கு ஒன்றைப் பதிவு செய்திருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு Police தன்னுடைய விசாரணையை மேற்கொண்டு வருகிறது. இதற்கிடையில், எடுக்கப்பட்ட அந்த செல்ஃபோனிலிருந்து இதுவரையில் எதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று அரசுக்கு அதிகாரிகள் தெரிவித்த கருத்தை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த செல்ஃபோனை ஆய்வு செய்ததில், அதற்கு நான்கு குறுந்தகவல்கள்–S.M.S. வந்தன என்றும், 12 S.M.S.-கள் சென்றிருக்கின்றன என்றும், 10 Missed Calls record ஆகியிருக்கிறதென்றும், 8 received calls அதிலே பதிவாகியிருக்கின்றன என்றும், 18 dialled numbers அதிலே பதிவாகியிருக்கின்றன என்றும் 'Q' Branch அனுப்பிய அறிக்கையிலே அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இவற்றில், எட்டு முறை U.K. நாட்டுக்கு அவர் பேசியிருக்கிறார் என்றும், ஒரு முறை Srilanka–விற்குத் தொடர்பு கொண்டிருக்கிறார் என்றும், இது போக உள்ள எண்களில் 22 முறை தமிழ்நாட்டிலும், ஐந்து முறை சென்னைக்கும் தொடர்பு கொண்டுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்திருக்கிறது. அவருடைய வழக்கறிஞரோடும் அவர் செல்ஃபோனிலே பேசியிருப்பது இப்பொழுது தெரிய வந்திருக்கிறது.

இந்த செல்ஃபோன் 13–3–2009 அன்றைக்கு activate செய்யப்பட்டிருக்கிறது. அதன் உரிமையாளர் திரு. ரவி என்றும், அவரது முகவரி, 4/264 கனகசமுத்திரம் வில்லேஜ், காட்பாடி தாலுகா என்றும் அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த செல்ஃபோனுடைய எண் '9629988352' என்றும் அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

வெளிநாட்டுக்குப் போன நம்பர்கள், யார், யாருக்குப் போயிருக்கின்றன என்பதையெல்லாம் 'Q' Branch அதிகாரிகள் துருவித் துருவி விசாரணை நடத்துவார்கள். பதிவு செய்யப்பட்ட வழக்கின்மீது, காவல் துறையால் I.P.C. section–ல் அவர்கள்மீது charge செய்து, நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கிடையில் அவருடைய வழக்கறிஞர் அவர்கள் நளினியின் அறையில்

செல்ஃபோன் வைத்து எடுக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறாரே தவிர, அதன்மீது எந்தவிதமான complaint–ம் தரவில்லை. எனவே, இதுவரை வந்த தகவலை நான் இந்த அவைக்கு அளித்திருக்கிறேன்.

முற்பகல் 10–20

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னை, கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலம், C.M.D.A. நிபந்தனைகளை மீறி தனியார் கட்டுமான நிறுவனம் முறைகேடாகப் பயன்படுத்தி வருவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சென்னை, கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான 3 ஏக்கர் நிலத்தைப் பாதுகாப்பதில் C.M.D.A. விதித்த நிபந்தனைகளை மீறி, தனியார் கட்டுமான நிறுவனம் முறைகேடாகப் பயன்படுத்தி வருவது குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். ரவிச்சந்திரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. அ. தமிழரசு, டாக்டர் க. நெடுஞ்செழியன், திரு. தி. வேல்முருகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. ஞா. ஜாண் ஜோசப், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. கே. உலகநாதன் ஆகியோர் விதி 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 3.03 ஏக்கர் நிலத்தில் 1.77 ஏக்கர் நிலம் திருக்கோயிலுக்குச் சொந்தமானதாகவும், அதில் 1.26 ஏக்கர் நிலம் ஏற்கெனவே மத்திய அரசினுடைய பொதுப் பணித் துறைக்கு விற்கப்பட்டதாகவும், கடந்த ஆண்டு இதே மாமன்றத்தில் எழுப்பிய ஒரு கவன ஈர்ப்புத்*